1975 மார்ச் 24]

அரிசன, பின்தங்கிய மாணவர்களின் உணவு இல்லங்கள்

திரு. எம். சங்கரலிங்கம் (திரு. வே. தங்கப்பாண்டியன் சார்பில்) : மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:—

(அ) தமிழ்நாட்டிலுள்ள அரிசன, பின்தங்கிய மாணவர்களின் உணவு இல்லங்களுக்கு நியாய விலையில் உணவு தானியங்கள் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளனவா?

(இ) ஆமெனில், எத்தனை இல்லங்களுக்கு அவ்வாறு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

(இ) தமிழ்நாட்டிலுள்ள எல்லா அரிசன, பின்தங்கிய மாணவர் இல்லங்களுக்கும், அரசு இருப்பிலிருந்து, பொது விநியோக முறை விலையில், அரிசி விநியோகம் செய்ய அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இப்பொறுப்பு மாவட்ட ஆட்சியாளரிடம் ஒப்படைக்கப்பட்டு, அதற்கான ஒதுக்கீடும் செய்யப்பட்டுள்ளது.

Notification of Pudukkottai District as a Backward District

* 179 Q.—THIRU M. SANKARALINGAM (on behalf of THIRU V. THANGAPANDIAN) : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the State Government have requested the Central Government to notify Pudukkottai District as a Backward District ; and

(b) if so, the reply given thereon by the Central Government?

புதுக்கோட்டை மாவட்டத்தை பின்தங்கிய மாவட்டம் என அறிவித்தல்

திரு. எம். சங்கரலிங்கம் (திரு. வே. தங்கப்பாண்டியன் சார்பில்) : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:—

(அ) புதுக்கோட்டை மாவட்டத்தை பின்தங்கிய மாவட்டம் என அறிவிக்க வேண்டுமென்று மத்திய அரசிடம் மாநில அரசு கோரியுள்ளதா?

(இ) ஆமெனில், அதற்கு மத்திய அரசு அளித்த பதில் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) ஆம்.

(இ) புதுக்கோட்டை மாவட்டத்தை தொழில் துறையில் பிற்பட்ட மாவட்டம் என மத்திய அரசு அறிவித்துள்ளது.

Charges for Government Advertisements

* 180 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—